# வாழ்வியலில் அறம் சார்ந்த உணர்வுகள்

**முனைவர் ஏ. மேனகா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**ஸ்ரீகிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி**
**சென்னை**
menakaroshinii@gmail.com

10

**ஆய்வுச்சுருக்கம்**

சமுதாயம் பகிர்ந்து வாழவும் சமமாக ஒருங்கிணைந்து தொழில் செய்து வளம் பெறவும் பகுத்துண்டு, பாதீடு என்ற வகையில் விரும்பி வாழவும் பழந்தமிழர் நாகரீகம் நோக்கி பயணித்த போதும் முந்தைய பாதீட்டு சமன்பாட்டை பின்பற்றிய நெறியே அறம் என்பர். திருவள்ளுவர் தமது குறளில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் எனும் நான்கும் இல்லாதிருத்தலாகிய அற உணர்வுகளை உணர்த்தியுள்ளார்.

**ஆய்வு நோக்கம்**

அற உணர்வுடையோரை அறவினை செய்தே வாழ்வோரையும் வாழ்விப்போரையும் உய்வடையச் செய்யும் எனும் திருவள்ளுவர் கருத்தை முன்னிறுத்துவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

அறுத்தல், விளைநிலம், இறுமாப்பு, பாதீடு, சமன்பாடு

**முன்னுரை**

உலகப் பொதுமறையாய் விளங்கும் திருக்குறள் பாரதியாரின் கனவை நினைவாக்கியது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். அந்த வகையில் உள்ளதோறும் உள்ளதோறும் உள்ளம் உருக்கும் உலகப் பொதுமறையாம் திருக்குறளில் காணலாகும் வாழ்வியல் அற உணர்வுகளைச் சுட்டிச் செல்வது இவ்வாய்வின் நோக்கம்.

**வாழ்வியல் அற உணர்வுகள்**

இயற்கையை இலக்கியத்தின் பொருளாக்கி மனித வாழ்வியலை வளமாக்கிய சிறப்புக்குரியவர்கள் நம் முன்னோர்கள். வாழ்வை மிக நுணுகி ஆய்ந்து தன் வரலாறு கூறுவதில் முதன்மையானவர்கள். அவர்கள் தம் வாழ்வியலை வழிமொழிந்த இலக்கியங்களில் முப்பாலும் ஒன்று.

இயற்கையைப் போன்ற பொதுமையானது அறம். அறு +அம்=அறம் என பொருள் பெறும். அறு என்று சொல்லக்கூடிய அறுத்தல் எனும் தொழில் வேறுபடுத்தி அணுகும் முறையை அறுத்தெறிதல் என்ற உலகியல் வழக்கினை உட்பொருளாய்க் கொண்டமைவது.

மனித சமுதாயம் நீண்ட நெடிய வரலாற்றை உடையது. காட்டுமிராண்டி என்ற நிலையில் இருந்த மனிதன் தனக்கென ஒரு வாழ்தலை அமைத்துக் கொண்டு வாழும் போது ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கத் தொடங்கிய காலக்கட்டத்திலும் தேவையானவற்றைத் தவிர்க்கவும் அறு எனும் தொழில் தேவை என்ற இயல்பை நோக்கியே தேவையானவற்றைப் பெறவும் அறம் எனும் ஒற்றைக் கொள்கை பிறந்திருக்க வேண்டும். மனிதபயன், சமூக ஒழுங்குமுறை எனும் நோக்கில் தோன்றியிருக்க வேண்டும். ஆகையால் அறம் என்பதை மனித சமுதாயத்தைப் போற்றி வளர்க்கும் ஒழுங்குமுறை வழக்கமாய் பின்பு மரபாகி அறுத்தல் என்ற தொழில் பட அறம் என்று பண்டைத் தமிழர்கள் நெறிபட வாழ்ந்து வந்துள்ளனர். சமுதாயம் பகிர்ந்து வாழவும் சமமாக ஒருங்கிணைந்து தொழில் செய்து வளம் பெறவும் பகுத்துண்டு, பாதீடு என்ற வகையில் விரும்பி வாழவும் பழந்தமிழர் நாகரீகம் நோக்கி பயணித்த போதும் முந்தைய பாதீட்டு சமன்பாட்டைப் பின்பற்றிய நெறியே அறம் என்பர்.

நல்வாழ்வுக்குப் பயன்படுகின்ற அனைத்து தன்மைகளையும் தன்னில் கொண்டு நிற்பது அறம். அறமே வாழ்க்கைக்கு முதன்மையானது, முதற்படி. இதனையே ஔவையார் அறம் செய்ய விரும்பு என மொழிவார். வாழ்க்கையில் இன்பம் துய்க்க பொருள் வேண்டும். பொருளைத் தக்க வழியில் ஈட்ட வேண்டும். அந்த நெறியை, வழியை உணர்த்துவன அறநூல்கள். அறத்தால் பொருள் பெற்று அப்பொருளால் இன்பம் துய்த்து தீர்ந்தபின் பிறவி துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். அதற்குத் திருவள்ளுவர் தம் குறளில் பல அறநெறிகளைச் சுட்டிச் செல்கின்றார்.

**அறம்**

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் காலம், இனம், மதம், மொழி, நாடு அனைத்தையும் கடந்து எல்லோருக்கும் எக்காலத்திற்கும் உரிய பொதுவான உயரிய கருத்துகளைக் கூறுகின்ற அறநூலாகத் திகழ்கின்றது. இதனால் தான், “எல்லா பொருளும் இதன் பால் உள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்” என்பார் மதுரை தமிழ்நாகனார். மனதில் மாசு இல்லாதவனாக இருப்பதே சிறந்த அற உணர்வாகும்; மனதில் மாசு இல்லாதவனாக இருந்தால் அதுவே சிறந்த வாழ்வியல் அறமாகும் என்கிறது வள்ளுவம்.

அறநெறியில் வாழும் மனிதன் உண்மையான வாழ்வை அடைவான். பல பொருள் குறித்த ஒரு சொல்லாய் அமையும் அறத்திற்கு மனதளவில் குற்றம் இல்லாமல் இருப்பதும் இனிய சொற்களைப் பேசுவதும் அறம் (குறள் 93 ) என்று வரையறுக்கிறார் வள்ளுவர்.

மனதால் அருள் செய்தல் வேண்டும். எல்லா குற்றங்களுக்கும் மனமே விளைநிலமாக இருப்பதால் அறம் செய்யக்கூடிய நிகழ்வு முதலில் மனதில் இருந்தே தொடங்க வேண்டும் என்று விரும்புகிறார் வள்ளுவப் பெருந்தகை.

அத்தகு மாசற்ற மனம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றால் நான்கு வகை குற்றங்களை ஒழிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னா சொல் ஆகிய நான்கும் மனதில் படியும் குற்றங்கள் ஆகும். (குறள் 35) இவற்றை விட்டு நடப்பதே அற உணர்வாகும். ஆனால் நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் இந்நான்கு குற்றங்களும் நிரம்ப காணப்படுகின்றன. குற்றங்களை நீக்கி அகத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அழுக்காறு உடைய ஒருவனைக் கண்டிக்க வேறு பகைவர் எவரும் தேவையில்லை. பகைவர் மறந்தாலும் அழுக்காறு எனும் அப்பண்பே அவர்களைத் தண்டித்து விடும் (குறள் 168 )என்கிறார். குற்றத்திலிருந்து மனிதன் விடுபட வேண்டும் என்றால் அவனது மனம் அன்பால் நிறைந்திருக்க வேண்டும். அன்பு ஒருவனுக்குள் இருந்தால் அவனது வாழ்க்கையானது எப்படி இருக்கும் என்பதை வேதம் பின்வருமாறு பகர்கின்றது. அன்பு நீடிய சாந்தம் தயவு உள்ளது அன்புக்கு பொறாமை இல்லை அன்பு தன்னைப் புகழாது இறுமாப்படையாது. அன்பு மனிதனை மனிதனாக மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தது. உலகில் நடக்கும் பல துன்பங்களுக்கு அடிப்படை காரணம் இப்பண்பே. போதும் என்ற மனதில்லாமல் இவ்வுலகத்தில் உள்ள அனைத்துமே தமக்குரியதாக ஆக்க வேண்டும் என்ற விருப்பமே மனிதனைக் குற்றம் நிறைந்தவனாக மாற்றுகிறது.

அதனை அறுத்து மிகுந்த மன தாழ்மையையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பில் ஒருவரை ஒருவர் தாங்கி (எபேசி-4:2) வீண் புகழ்ச்சியை விரும்பாமல் ஒருவரை ஒருவர் கோபம் மூடாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக் கடவோம் (கலா-5:26) என்கிறது வேத வாக்கியம். சான்றோர்களும் ஆசை அறுமின் என்று குறிப்பிடுவர். அடுத்ததாக வெகுளி. அதாவது சினம். நெருப்பு போன்றது. குறட்பாக்கள் 305, 306 ஆகியன, ஒருவன் தன்னைப் பாதுகாக்க நினைத்தால் அவன் சினம் கொள்ளக் கூடாது என்றும் அவ்வாறு அவன் சினம் கொண்டால் அது தன்னை அடைந்தவரை அழிப்பதோடு அவருக்குத் துணையாக நிற்பவரையும் கொன்று விடும் என்கிறார். ஆகவே அத்தகு சினத்தை யாரிடமும் வெளிப்படுத்தாது மறத்தல் வேண்டும் (குறள் 303) என்று வலியுறுத்துகின்றார்.

இன்னா சொல் இனிமை இல்லாத பயன் இல்லாத சொற்களைப் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். சொற்களில் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன் தரும் சொற்களையே சொல்லுதல் வேண்டும். பயன் அற்ற சொற்களைத் தவிர்த்தல் வேண்டும். (குறள் 200) என்கிறார் வள்ளுவர்.

அழுக்காறு, ஆசை, வெகுளி, இன்னா சொல் ஆகிய நான்கு குற்றங்களையும் விட்டு ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார். ஏனெனில் மனிதன் தன் வாழ்வில் உயர்வடைய ஒழுக்கமான அறம் ஒன்றையே முதன்மையாய்க் கொண்டு அமைதல் வேண்டும் என வாழ்வியல் விழுமியத்தினை கற்பித்திருக்கிறார். அறத்தால் வருவதே இன்பம் (குறள் 39 ) என்று கூறி அறத்தை வலியுறுத்தி நிற்கிறார்.

**தீமை இலாத சொலல்**

மனிதனை உயர்த்தும் உயர்ந்த பண்புகளுள் மற்றொன்று உண்மை. அறிவும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்களுக்கு உண்மை பேசுவதே சிறந்த விளக்காக அமைந்து அவரது வாழ்வை ஒளிபெறச் செய்யக் கூடியது (குறள் 299) வாய்மை என்று மொழிகிறார். பொய் கூறக்கூடாது. வாயினால் பொய் கூறாமல் இருப்பதுடன் மனதினாலும் பொய் பேச நினைக்கக் கூடாது . (குறள் 297) பொய் பேசாமல் இருந்தாலே போதும் அதுவே எல்லா அறங்களையும் விட சிறந்த அறம் ஆகும். பொய் பேசக்கூடாது என்றால் எதை பேசுவது வாய்மையை உண்மையைப் பேச வேண்டும்.

மற்றவர்களுக்குச் சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுவது வாய்மை (குறள் 291) என்று கூறி அப்பண்பினை மனதோடு (குறள் 295) கொண்டு வாழ்வது தலையாயது என்று உரத்துச் சொல்கிறார்.இதனையே பாரதியாரும் பொய் சொல்லக்கூடாது பாப்பா என்றும் வள்ளலார் பொய்யாமை பேசாதிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுவர். அதனால் அன்றோ வாய்மையே வெல்லும் என்பதால் பொய்யாமையை பொய் கூறாமையை விளக்க வாய்மை எனும் தனி அதிகாரத்தையே அமைத்திருக்கிறார் வள்ளுவர்.

**தொகுப்புரை**

இயற்கை இயல்பானது. அதனையே வானின்று உலகம் வழங்கி வருதலால் என்று தன் இயல்பு செயலாக்க வினை பயனை நமக்கு வலியுறுத்துவார் வள்ளுவர். அறத்தினூங்கு ஆக்கமில்லை என அறத்தினை மறத்தல் அநீதி என்பார். உலகில் பிறந்த ஒவ்வொரு உயிர்ப் பொருளும் அதன் இயல்பு தன்மைக்கு ஏற்ப வினை ஆற்றல் தேவை என்பதை ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல் என்று மொழிவார் அறம் என்பது சிந்தனையின் குறியீடு. ஒரு மனிதன் தன் புறச் செயல்களால் மட்டுமே பிற உயிரைக் காக்க முடியும் அதனையே அறம் என்பார் வள்ளுவர். செயலின் வித்து மனம். அது சிந்தித்தல் என்ற அறவழிப்பட்டு நிற்க வேண்டும் என்பதை மனத்துக்கண் என தொடங்கி மாசின்றி உருவாக்கி அனைத்து உயிர்களுக்கும் அறம் செய்து நிற்பது என்று வாழ்வோரையும் வருவோரையும் அறச் சிந்தனைக்குத் தூண்டுதலாய் தம் குறளினை பதியமிடுகிறார்.

**துணைநூல்கள்**


1. சேயோன். டாக்டர், திருக்குறள் காட்டும் நெறிகள், மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், சென்னை
2. விவிலியம்